[2003 ஏப்ரல் 30

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே செய்யாறு, என்னுடைய வந்தவாசி தொகுதியிலும் வருகிறது. அங்கே அனப்பத்தூர் என்ற இடத்திலே அரசு அனுமதி கொடுத்திருக்கிற இடத்தையும் மீறி, அந்த எல்லையையும் மீறி கூடுதலாகக் கிட்டத்தட்ட 100 ஏக்கர் அளவிற்கு மிக ஆழத்திற்கு மணல் எடுக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியிலே குடிநீர் ஆதாரங்கள் மிகவும் பாதிக்கப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்திலேகூட Mines துறையைச் சேர்ந்த அதிகாரி எடுத்துச் சொல்லியும்கூட நடவடிக்கை இல்லை. எனவே, இத்தகைய சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கு அதிகாரிகளும் துணை போகிறார்களா என்பதை அரசு ஆய்வதுடன் கொடுக்கப்பட்ட உரிமத்தை இப்படித் தவறாகப் பயன்படுத்தி எல்லையைத் தாண்டிக் கூடுதலாக மணல் அள்ளுபவர்களுக்கு உரிமத்தை ரத்துச் செய்ய அரசு முன்வருமா, அவர்கள்மீது சட்டப்படி கிரிமினல் நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படித் தவறாகப் பயன்படுத்துகிறவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுடைய உரிமங்களை ரத்துச் செய்வதற்குக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்யாறு எனது தொகுதியிலே உற்பத்தியாகிறது. செங்கம், கலசப்பாக்கம், பெரணமல்லூர், போளூர் வழியாக நம்முடைய கடற்கரைக்கு வருகிறது. அந்த ஆறு வருகின்ற வழிகளிலே மணல் எடுப்பதற்கு எத்தனை பேருக்கு அரசு உரிமம் வழங்கியிருக்கிறது, எந்தெந்த இடத்தில். அந்த மாவட்டத்தில் இருக்கின்ற....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செய்யாறு பற்றிக் கேளுங்கள்.

திரு. போளூர் வரதன்: செய்யாறு பற்றித் தான், மணல் எடுப்பது பற்றித்தான் கேட்கிறேன். 4, 5 தொகுதிகள் வழியாக வருகிறது. அந்த மாவட்டத்தில் இருக்கின்ற A. D. (Mines) கண்டுகொள்வதில்லை. வருகிற வழியிலே ஒரு இடத்திலே உரிமம் கொடுத்துவிட்டு, 10 இடங்களிலே

2003 ஏப்ரல் 30]

எடுக்கிறார்கள். கிராமத்திலே இருக்கிற மக்கள் அதைக் கேட்பதற்குப் போனால், லாரியை விட்டு அடிப்பேன் என்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் கேட்டாலே பதில் இல்லை..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள், குற்றச்சாட்டு கூடாது.

திரு. போளூர் வரதன்: நான் அரசைக் கேட்க விரும்புவது, அந்த ஆறு செல்கின்ற வழியிலே எத்தனை பேருக்கு உரிமம் கொடுத்து இருக்கிறீர்கள்? எத்தனை இடங்களில் தவறுதலாக மணல் எடுக்கிறார்கள்? அப்படி எடுக்கின்றவர்கள்மீது எத்தனை முறை வழக்குத் தொடுத்து இருக்கிறீர்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்யாறு வட்டத்தில் 4 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. செங்கம் வட்டத்தில் 2 பேர்களுக்கும், போளூர் வட்டத்தில் 2 பேர்களுக்கும் குத்தகை வழங்கப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் இதுவரைக்கும் 57 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு, கிட்டத்தட்ட 14 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் வரையில் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்த நிபந்தனைகளின் அடிப்படையில், மணல் வாருவதற்கான உரிமம் வழங்கப்படுகின்றது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிநீர் ஆதாரங்களில் இருந்தும், அரசு மற்றும் உள்ளாட்சி குடிநீர்க் கிணறுகளிலிருந்தும், பாலம் போன்றவற்றில் இருந்தும், 500 மீட்டர் சுற்றளவிற்கு மணல் குவாரி செய்யக் கூடாது. ஆற்றங்கரையிலிருந்து 50 மீட்டருக்குள் மணல் குவாரி செய்யக் கூடாது. இயந்திரங்கள் பயன்படுத்தி மணல் எடுக்கக் கூடாது. குத்தகைதாரர்கள் எடுத்துச் செல்லும் ஒவ்வொரு சுமைக்கும் சம்பந்தப்பட்ட அலுவலரால் வழங்கப்பட்ட நடைச்சீட்டை வாகனத்துடன் எடுத்துச் செல்ல வேண்டும்

என்ற அடிப்படைக் காரணங்களைக் கொண்டு ஏலம் விடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கோ. இரவிராஜ், என்ன நீங்கள் கையைத் தூக்கி விட்டு, நான் அனுமதிக்கும்போது உட்கார்ந்து கொண்டு இருக்கிறீர்கள்?

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆற்றுப்படுகையிலே மணல், ஏரிகளில் gravel போன்ற கனிம வளங்களைச் சிலர் தவறான முறையிலே எடுத்து வருகிறார்கள். அதைத் தடுப்பதற்காகப் பல அதிகாரிகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அப்படி மேற்கொள்கிற அதிகாரிகள் மீது—கடந்த 3 மாதத்திற்கு முன்பாக அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்கள்மீது-- கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. அதுபோல, கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் அவர்களையும் கொலை செய்யக்கூடிய அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். சமீபத்திலேகூட, காஞ்சிபுரம் மாவட்டம், பழையசீவரம் கிராமத்திலே சண்முகசுந்தரம் என்கிற ஒரு அதிகாரி லாரி ஏற்றிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். ஆக, பல அதிகாரிகள் (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் கேட்டு முடித்துக்கொள்கிறேன். பல அதிகாரிகள் இதைத் தடுப்பதற்கான பல்வேறு முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு இருந்தாலும், ஒரு சில அதிகாரிகள் அதற்கு உடந்தையாகவும் இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. ஆகவே, அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க.....

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 367, திரு. ஆ.கு.சீ. அன்பழகன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

367—

துணை மின் நிலையம்

***20487—திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—